முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

முன்னிலை : திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம்., எல்.எல்.பி.,
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

2023-ஆம் வருடம் ஜுன் மாதம் 24-ஆம் தேதி சனிக்கிழமை

**இடைக்கால மனு எண்.2/2021**

**மேல்முறையீடு வழக்கு எண்.13/2018-ல்**

(CNR No.TNKR01-000513-2018)

சதீஷ்குமார் ... மனுதாரர் / 16 ம் எதிர்மேல்முறையீட்டாளர் / 16 ம் பிரதிவாதி

/எதிர்/

1) தங்கம்மாள் ...1 ம் எதிர்மனுதாரர் / 1 ம் எதிர்மேல்முறையீட்டாளர் / வாதி

2) சுப்பிரமணி
3) பெருமாள்
4) அருக்காணி அம்மாள்
5) லட்சுமி
6) வளர்மதி
7) ஜெகநாதன்
8) ரமேஷ்
9) தங்கவேல்
10) அருண்ராஜ்
11) கல்பனா
12) இளவர் பவனிதா (வயது 16), இளவர் சார்பாக அவரது தாயாரும், அடுத்த நண்பருமான 11 ம் எதிர்மனுதாரர் கல்பனா மூலமாக.
13) கண்ணன்
14) சடையம்மாள்
15) பழனியம்மாள்
16) கோமதி ... எதிர்மனுதாரர்கள் / மேல்முறையீட்டாளர் / எதிர்மேல்முறையீட்டாளர்கள் / பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 24.11.2022-ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.B.மலர்கண்ணன், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.S.ரமேஷ், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.பழனிசாமி, 11, 12 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குரைஞர் திரு.P.ராமநாதன் ஆகியோர் முன்னிலையாகியும், 3 முதல் 10 மற்றும் 13 முதல் 16 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக மேல்முறையீட்டில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 2, 11, 12 பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாமலும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், இரு தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## <u>உத்தரவு</u>

மனுதாரர் தரப்பில் இம்மனு கட்டளை 8, விதி 9 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன்படி எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்**</u>:

2) மனுதாரர் மேல்முறையீட்டில் 16ம் எதிர்மேல்முறையீட்டாளர். மேல்முறையீடு தாக்கல் செய்த பிறகு தாவா சொத்துக்களை தொடர்பான தகவல்களை மனுதாரர் சேகரித்துள்ளார். கரூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தங்கம்மாள் என்பவர் அசல் வழக்கு எண்.34/2010 என்ற வழக்கை தாக்கல் செய்த போது இந்த மனுதாரர் இளவர் 18ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளார். 16ம் பிரதிவாதியாக இருந்த மனுதாரரின் தாயார் பழனியம்மாள் இளவரின் காப்பாளராக இருந்தார். மேற்சொன்ன பழனியம்மாள் வழக்கை தொடர்ந்து நடத்தாமல் ஒருதலைபட்ச உத்தரவுக்கு விட்டுவிட்டார். பழனியம்மாள் ஒருதலைபட்ச உத்தரவுக்கு விட்டுவிட்ட பிறகு இளவருக்காக நீதிமன்ற காப்பாளரை நியமிக்க வாதி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வாதி தாக்கல் செய்த வழக்கில் மாண்புமிகு கூடுதல் சார்பு நீதிபதி, கரூர் அவர்களால் 21.12.2017 அன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது. மேற்படி வழக்கு நிலுவையில் இருந்த போது இந்த மனுதாரர் உரிய வயது அடைந்துள்ளார் என்பதும், விசாரணை நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படவில்லை என்பதும் உண்மை. அவ்வாறு செய்திருந்தால் விசாரணை நீதிமன்றம் மனுதாரருக்கு புதிய அறிவிப்பு அனுப்பியிருக்கும். அசல் வழக்கின் 2ம் பிரதிவாதியான சுப்பிரமணி இந்நீதிமன்றத்தில் மேல்முறையீடு வழக்கு எண்.13/2018 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீடு வழக்கு எண்.13/2018 வழக்கில் ஆஜராகுமாறு இந்த மனுதாரருக்கு அறிவிப்பு வந்துள்ளது. மேல்முறையீடு தாக்கல் செய்யும் போது இந்த மனுதாரர் உரிய வயது அடைந்துவிட்டார். அதனால் மனுதாரருக்கு நேரடியாக அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. மேல்முறையீட்டில் ஆஜராகி பதிவேடுகளை சரிபார்த்த போது 17.11.2015 அன்று இந்த மனுதாரர் உரிய வயது அடைந்த பிறகு வாதியால் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பழனியம்மாளுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளதால் இளவராக இருந்த மனுதாரர் அப்போது மனமுடைந்துபோனார். இளவரின் நலன் பாதுகாக்கப்படவில்லை என்பது வெளியானது. 25.08.1992 அன்று தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளது என்பதை விசாரணை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படவில்லை. பாகப்பிரிவினை சட்டத்தின் மூன்று நிலைகளை கொண்டுள்ளது. (1) அந்தஸ்து பிரித்தல் (2) அளவீடுகள் மற்றும் எல்லைகள் மூலம் வகுத்தல் மற்றும் (3) சொத்துக்களை உடைமையாக வழங்குதல் ஆகும். முதல் மற்றும் கடைசி நிலைகளை பொறுத்தவரை பாகப்பிரிவினைக்கு எந்த ஆவணமும் தேவையில்லை. 1992-ஆம் ஆண்டு ஏற்பட்ட பாகப்பிரிவினையில் காளியம்மாள் மற்றும் அவரது மகள் தங்கம்மாள் ஆகியோரை சொத்திலிருந்து உடமைநீக்கம் செய்யப்பட்டது குறித்து பிரதிவாதிகள் விசாரணை நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு

செல்லவில்லை. உரிமை குறித்து சரியாக கூறப்படவில்லை. இந்த மனுதாரர் மேல்முறையீட்டு மனுதாரராக நுழைந்த பிறகு தான் மனுதாரர் வழக்கு வரலாற்றை முழுவதுமாக தேடி பார்த்த போது வழக்கு சட்டப்டி பராமரிக்க முடியாதது என்பது மனுதாரருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இளவரை பாதுகாப்பதற்கு எந்த முறையான நடவடிக்கையும் எடுக்காமல் தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளதால் அந்த தீர்ப்பாணை வாதியை கட்டுப்படுத்தவோ அல்லது நடைமுறைபடுத்துவோ முடியாது. இந்த சூழ்நிலையில் மட்டும் மனுதாரர் கரூர் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.664/2018 என்ற வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. உண்மையான விபரங்களை கருத்தில் கொண்டு, உண்மை பின்னணி மற்றும் சட்ட சிக்கல்கள் குறித்து இந்நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வர அசல் வழக்கு எண்.34/2010 வழக்கில் விரிவான எதிர்வழக்குரை தாக்கல் செய்ய மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும். விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரருக்கு வாய்ப்பு அளிக்கப்படாததால் இந்நீதிமன்றத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட வேண்டும். காலதாமதம் ஏதுமில்லை. ஏதேனும் இருந்தால்கூட மன்னிக்கலாம். எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்வதால் எதிர் தரப்பினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது. மாறாக ஏற்றுக் கொள்ளாவிடில் மனுதாரருக்கு அதிக பாதிப்பு ஏற்படும். எனவே எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள உத்தரவிடக் கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை சுருக்கம்</u>**:

3) மனு விபரங்கள் மறுக்கப்படுகிறது. இந்த எதிர்மனுதாரரால் ஒப்புக் கொள்ளப்படும் சங்கதிகளை தவிர இதர சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். இந்த வழக்கில் முதலில் மனுதாரரின் தந்தை ராமலிங்கம் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார். அவர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி குறிப்பாணை தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்கரையை தமதாக ஏற்றுக் கொண்டார். பின்னர் அவர் அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக அவரது மனைவி பழனியம்மாள், கோமதி அதாவது 16, 17 பிரதிவாதிகள் மற்றும் மனுதாரரை விட்டுவிட்டு 01.05.2015 அன்று இறந்துவிட்டார். எனவே இறந்துபோன 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசாக மனுதாரர் சேர்க்கப்பட்டார். எனவே மனுதாரர் இறந்துபோன 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசாக சேர்க்கப்பட்டதால் அவர் எந்தவொரு வாதத்தையும் எடுக்க தகுதியற்றவர். 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசான மனுதாரர் 5ம் பிரதிவாதியின் வாதத்தை மட்டுமே எடுக்க அவருக்கு உரிமை உண்டு. 16ம் பிரதிவாதியை பாதுகாவலராக நியமித்திருந்தாலும் அது விதிமீறல். அது வழக்கின் தகுதியை எந்த வகையிலும் பாதிக்காது. ஏனெனில் 5ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டது நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு

விசாரணை செய்யப்பட்டு தகுதியின் அடிப்படையில் முடிவுக்கு வந்துள்ளது. எனவே வெறும் விதிமீறல் வழக்கை எந்த வகையிலும் பாதிக்காது. 5ம் பிரதிவாதியின் வாதத்தின் அடிப்படையில் இந்த விபரத்தை வாதிட அவருக்கு உரிமையுண்டு. எனவே மனுதாரருக்கு 5ம் பிரதிவாதியின் வாதத்திலிருந்து மாறுப்பட்ட எந்தவொரு வாதத்தையும் எடுக்க உரிமை இல்லை. 5ம் பிரதிவாதியின் வாரிசான மனுதாரர் 5ம் பிரதிவாதியின் வாதத்தை மட்டுமே எடுக்க அவருக்கு உரிமை உண்டு. கரூர், கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.34/2010 வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாரர் அசல் வழக்கு எண்.664/2018 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கு பாகப்பிரிவினைக்காக 2010-ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டது. மனுதாரர் மற்றும் மற்ற எதிர்மனுதாரர்களுக்கும் இந்த வழக்கில் வெற்றி கிடைக்காது என்பது நன்றாகவே தெரியும். எனவே வழக்கை முடிந்தவரை இழுத்தடித்து வருகின்றனர். மனுவுக்கு எந்த முகாந்திரமும், தகுதியும் இல்லை. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும். மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல. இம்மனுவை அனுமதித்ததால் எதிர்மனுதாரருக்கு அதிக பாதிப்பு ஏற்படும். எனவே மனுதாரரின் மனு இந்த எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

4) இம்மனு விசாரணையின் போது இரு தரப்பிலும் ஆவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

5) மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொள்ள வேண்டி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கக்கூடியதா? என்பதை காண்பதேயாகும்.

**<u>தீர்வு</u>** :

6) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரர் மேல்முறையீட்டில் 16ம் எதிர்மேல்முறையீட்டாளர், அசல் வழக்கில் 18ம் பிரதிவாதி. மனுதாரர் தரப்பில் மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் இளவராக சேர்க்கப்பட்டுள்ளார் என்பதும், அவர் விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் இருக்கும் போது 17.11.2015 அன்று உரிய வயது அடைந்துவிட்டார் எனவும், அவரை உரிய வயது அடைந்தவர் என விளம்புகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருந்தால் விசாரணை நீதிமன்றத்திலிருந்து மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்திருப்பார் எனவும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காததால் மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு விசாரணை நீதிமன்றத்தில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை எனவும், மனுதாரர் வழக்கு கோப்புகளை பார்த்த போது விசாரணை நீதிமன்றத்தில் இளவரின் நலனை

பாதுகாக்கும் பொருட்டு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், எனவே விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நடைமுறைபடுத்த இயலாது எனவும், இளவரை கட்டுப்படுத்தக்கூடியதல்ல எனவும், இந்த சூழ்நிலையில் மனுதாரர் கரூர், சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.664/2018 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் எனவும், அவ்வழக்கிலும் மேற்சொன்ன விபரங்களை நீதிமன்ற கவனத்திற்கு கொண்டு வந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கக் கோரி மனு தாக்கல் செய்வதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளார் எனவும், மனுதாரர் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு விசாரணை நீதிமன்றத்தில் வாய்ப்பு அளிக்கப்படவில்லை எனவும், எனவே எதிர்வழக்குரை தாக்கல் செய்வதில் காலதாமதம் ஏதுமில்லை எனவும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது மனுதாரர் தரப்பு வழக்காகும்.

7) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் வழக்கில் முதலில் மனுதாரரின் தந்தை ராமலிங்கம் 5ம் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டார் எனவும், அவர் விசாரணை நீதிமன்றத்தில் ஆஜராகி குறிப்பாணை தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்கரையை தமதாக ஏற்றுக் கொண்டுள்ளார் எனவும், பின்னர் 5ம் பிரதிவாதி அவரது சட்டப்பூர்வ வாரிசுகளாக அவரது மனைவி பழனியம்மாள், கோமதி மற்றும் மனுதாரரை விட்டுவிட்டு 01.05.2015 அன்று இறந்துவிட்டார் எனவும், எனவே இறந்துபோன 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசாக மனுதாரர் சேர்க்கப்பட்டார் எனவும், எனவே மனுதாரர் இறந்துபோன 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசாக சேர்க்கப்பட்டதால் அவர் எந்தவொரு வாதத்தையும் எடுக்க தகுதியற்றவர் எனவும், 5ம் பிரதிவாதியின் சட்டப்பூர்வ வாரிசான மனுதாரர் 5ம் பிரதிவாதியின் வாதத்தை மட்டுமே எடுக்க அவருக்கு உரிமை உண்டு என்பது 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்காகும்.

8) இம்மனுவில் உள்ள 1ம் எதிர்மனுதாரர் வாதியாக இருந்து விசாரணை நீதிமன்றத்தில் தாவா சொத்துக்களில் 1/3 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/வாதி விசாரணை நீதிமன்றத்தில் அவருடைய சகோதரரான ராமசாமி கவுண்டர் என்பவரை 1ம் பிரதிவாதியாகவும், ராமசாமி கவுண்டருடைய மகன்களை 2, 3 பிரதிவாதிகளாகவும், வாதியுடைய இறந்துபோன சகோதரர் பழனியப்ப கவுண்டரின் வாரிசுகளை 4 முதல் 9 பிரதிவாதிகளாகவும், 3ம் பிரதிவாதியின் மகன்களை 10, 11 பிரதிவாதிகளாகவும், 3ம் பிரதிவாதியுடைய இறந்துபோன மகன் யுவராஜ் என்பவருடைய வாரிசுகளை 12, 13, 14 பிரதிவாதிகளாக காண்பித்தும், மற்ற பிரதிவாதிகள் 14ம் பிரதிவாதியுடைய நெருங்கிய நண்பர்கள் என காண்பித்து அசல் வழக்கு தாக்கல்

செய்துள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் 1ம் பிரதிவாதி முன்னிலையாகாமல் வருகையில்லாதவர் ஆக்கப்பட்டுள்ளார். மேலும் விசாரணை நீதிமன்றத்தில் 2 முதல் 11 மற்றும் 14 பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் 2 முதல் 11 மற்றும் 14 பிரதிவாதிகளுக்கு எதிராக 12.07.2010-ஆம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே விசாரணை நீதிமன்றத்தில் 2, 4 முதல் 11 பிரதிவாதிகள் தாக்கல் செய்த மனுவின் அடிப்படையில் 2, 4 முதல் 11 பிரதிவாதிகளுக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவு 16.11.2010-ஆம் தேதியில் நீக்கரவு செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். 4 முதல் 9 பிரதிவாதிகளும் ஒரே வழக்குரைஞர் மூலம் ஆஜராகியுள்ளனர். 4 முதல் 9 பிரதிவாதிகள் 13.07.2010 அன்று குறிப்பாணை தாக்கல் செய்து அந்த குறிப்பாணையின் மூலம் 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை தங்களது எதிர்வழக்குரையாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

9) விசாரணை நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது 5 ம் பிரதிவாதி அவரது மனைவியான 16 ம் பிரதிவாதி பழனியம்மாள், மகள் 17 ம் பிரதிவாதி கோமதி, அவரது இளவர் மகன் 18ம் பிரதிவாதி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு 01.05.2015-ஆம் தேதியில் இறந்துவிட்டார். மேற்சொன்ன நபர்களை வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு வாதி தரப்பில் இடைக்கால மனு எண்.504/2015 மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 18 ம் பிரதிவாதி இளவராக இருந்து வந்த காரணத்தால் அவருடைய அடுத்த நண்பரும், தாயாருமான 16 ம் பிரதிவாதியை காப்பாளராக நியமனம் செய்யக் கேட்டு வாதி தரப்பில் கட்டளை 32, விதி 3-ன்கீழ் இடைக்கால மனு எண்.503/2015 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன மனு 03.11.2015 அன்று அனுமதிக்கப்பட்டு 18ம் பிரதிவாதியின் தாயாரான 16ம் பிரதிவாதி இளவரின் காப்பாளராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். மேற்சொன்ன 18ம் பிரதிவாதியே இம்மனுவின் மனுதாரர் ஆவார். இம்மனுவின் மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் இளவராக இருந்த போது அவரது காப்பாளராக 16 ம் பிரதிவாதியை நியமனம் செய்து 03.11.2015 அன்று விசாரணை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. மனுதாரர் தற்போது இம்மனுவில் 17.11.2015 அன்று உரிய வயது அடைந்துவிட்டார் என மனுவில் கூறியுள்ளார். விசாரணை நீதிமன்றத்தில் 16ம் பிரதிவாதியை காப்பாளராக நியமனம் செய்த 03.11.2015 அன்று இம்மனுதாரர் இளவர் ஆவார். மேலும் மனுதாரர் 17.11.2015 அன்று உரிய வயது அடைந்துவிட்டார் என்பது மனுதாரரின் தனிப்பட்ட அறிவை சேர்ந்த விசயமாகும். மனுதாரர் உரிய வயது அடைந்துவிட்டார் என்பதை அவரது அம்மாவான 16 ம் பிரதிவாதி விசாரணை நீதிமன்றத்தில் தெரிவித்து மனுதாரரை உரிய வயது அடைந்தவர் என விளம்புகை

செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு அறிவுறுத்தியிருக்க வேண்டும். ஆனால் மனுதாரரின் காப்பாளரும், அடுத்த நண்பரும், தாயாருமான 16ம் பிரதிவாதி விசாரணை நீதிமன்றத்தில் அவ்வாறு குறிப்பாணை எதுவும் தாக்கல் செய்யவில்லை. அவ்வாறு குறிப்பாணை தாக்கல் செய்யாதது 16ம் பிரதிவாதியுடைய தவறாகும். மனுதாரர் இம்மனுவில் அவரது காப்பாளரும், தாயாருமான 16ம் பிரதிவாதி இளவரின் நலனுக்கு எதிராக விசாரணை நீதிமன்றத்தில் செயல்பட்டார் என்பது குறித்து குற்றச்சாட்டு எதுவும் எழுப்பவில்லை. எனவே விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் உரிய வயது அடைந்துவிட்டார் என தெரிவிக்காததற்கு மனுதாரரின் காப்பாளரும், தாயாருமான 16ம் பிரதிவாதியே பொறுப்பாகிறார்.

10) மேலும் மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் 5ம் பிரதிவாதியுடைய வாரிசு என்ற நிலையில் வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். மனுதாரர் தனிப்பட்ட முறையில் விசாரணை நீதிமன்றத்தில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரரின் தகப்பனாரான 5ம் பிரதிவாதி தனியாக எதிர்வழக்குரை ஏதும் தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதியுடைய எதிர்வழக்குரையை தன்னுடைய எதிர்வழக்குரையாக ஏற்றுக் கொண்டுள்ளார். மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தில் 5ம் பிரதிவாதியின் வாரிசு என்ற நிலையில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ள நிலையில் மனுதாரருடைய தகப்பனார் ஏற்றுக் கொண்டுள்ள 2ம் பிரதிவாதியுடைய எதிர்வழக்குரைக்கு முரணாகவோ அல்லது அந்த எதிர்வழக்குரையில் எடுக்கப்பட்டுள்ள சங்கதிகளை தவிர கூடுதலான சங்கதிகளை கூறி எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு சட்டப்படி மனுதாரருக்கு உரிமை கிடையாது. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் தரப்பில் கூடுதலாக வாதுரை வைக்க வேண்டுமென கருதும்பட்சத்தில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு விசாரணை நீதிமன்றத்தில் அனுமதி பெற்று தாக்கல் செய்ய வேண்டும். அதை தவிர்த்து 5ம் பிரதிவாதியின் வாரிசு என்ற நிலையில் கட்சி செய்யப்பட்டிருப்பதால் 16 முதல் 18 பிரதிவாதிகளுக்கு விசாரணை நீதிமன்றத்தில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு எந்த உரிமையும் எழவில்லை. எனவே விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரர் உரிய வயது அடைந்தவர் என விளம்புகை செய்வதற்கு வாதி தரப்பில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதால் உரிய வயது அடைந்த மனுதாரருக்கு விசாரணை நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு அனுப்பவில்லை. அவ்வாறு அறிவிப்பு அனுப்பாததால் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்பது ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் அமையவில்லை. உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 32-ல் இளவர் வாதி உரிய வயது அடைந்தவுடன் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை குறித்து கட்டளை 32,

விதி 12 கூறுகிறது. இளவர் பிரதிவாதி உரிய வயது அடைந்தவுடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து விதிமுறைகள் கூறப்படவில்லை. எனவே மனுதாரருக்கு விசாரணை நீதிமன்றத்தில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான வியாஜ்ஜிய மூலம் எழுவில்லை.

11) விசாரணை நீதிமன்றத்தில் 16 முதல் 18 பிரதிவாதிகள் வருகையில்லாதவர்கள் ஆக்கப்பட்டு 18.11.2016 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இளவருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதும் தவறு என கூறுவது ஏற்புடையதல்ல. விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரருடைய காப்பாளராக அவருடைய அம்மாவான 16ம் பிரதிவாதி நியமிக்கப்பட்டுள்ளார். 16ம் பிரதிவாதி தனக்காகவும், இளவருக்காகவும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால் 16 முதல் 18 பிரதிவாதிகளுக்கு எதிராக 18.11.2016 அன்று ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இளவருடைய காப்பாளரான 16ம் பிரதிவாதி அவருடைய கடமையை செய்ய தவறும்பட்சத்தில் நீதிமன்றமே அவரை காப்பாளர் நிலையிலிருந்து நீக்கிவிட்டு அவருக்கு பதிலாக வேறு காப்பாளரை நியமனம் செய்ய வேண்டுமென உரிமையியல் விசாரணைமுறைச் சட்டம் கட்டளை 32, விதி 11 கூறுகிறது. ஆனால் விசாரணை நீதிமன்றத்தில் 16ம் பிரதிவாதி காப்பாளர் நிலையிருந்து அவரது கடமையை செய்ய தவறிய போது 18ம் பிரதிவாதிக்கு காப்பாளராக நீதிமன்ற காப்பாளரை நியமனம் செய்ய வேண்டும். அவ்வாறு நியமனம் செய்யாதது விசாரணை நீதிமன்ற நடவடிக்கையில் ஏற்பட்டுள்ளது ஒரு குறைபாடாகும்.

12) விசாரணை நீதிமன்றம் அசல் வழக்கில் 21.12.2017 அன்று தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை பிறப்பித்துள்ளது. அந்த தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையை எதிர்த்து விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கில் உள்ள 2ம் பிரதிவாதி இந்த மேல்முறையீட்டை இந்நீதிமன்றத்தில் 17.04.2018-ஆம் தேதியில் தாக்கல் செய்துள்ளார். இந்த மேல்முறையீட்டு அறிவிப்பு எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அனுப்புவதற்கு 24.04.2018-ஆம் தேதியில் உத்தரவிடப்பட்டு, இந்த மேல்முறையீட்டில் இம்மனுதாராரர் இளவர் 16ம் எதிர்மேல்முறையீட்டாளராக காண்பித்து இளவருடைய அடுத்த நண்பரும், காப்பாளருமான அவருடைய அம்மா காண்பிக்கப்பட்டுள்ளார். இந்த மேல்முறையீட்டில் எதிர்மேல்முறையீட்டாளர்களுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டுள்ளது. 04.07.2018-ஆம் தேதியிட்ட விசாரணையில் இந்த மனுதாரர் இந்நீதிமன்றத்தில் முன்னிலையாகி தன்னுடைய வயது 21 என தெரிவித்துள்ளார். எனவே இம்மனுதாரர் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கும், மற்ற காரணங்களுக்காகவும் வழக்கு 01.08.2018 அன்று ஒத்தி

வைக்கப்பட்டுள்ளது. 01.08.2018 அன்று மனுதாரருக்காக வழக்குரைஞர் திரு.பி.மலர்கண்ணன் வக்காலத்து தாக்கல் செய்து முன்னிலையாகியுள்ளார். அதன்பிறகு மனுதாரர் உரிய வயது அடைந்தவர் என விளம்புகை செய்யக் கோரி இடைக்கால மனு எண்.695/2018 மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனுவானது 15.07.2019 அன்று அனுமதிக்கப்பட்டு, மனுதாரர் உரிய வயது அடைந்தவர் என அறிவிக்கப்பட்டுள்ளது. பின்னர் இடைக்கால மனு எண்.290/2019 மனுவில் பிறந்த உத்தரவுபடி மேல்முறையீடு சீர்திருத்தம் செய்ய அனுமதிக்கப்பட்டு சீர்திருத்தம் செய்யப்பட்டு மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் இடைக்கால மனு எண்.695/2018 மனுவில் பிறந்த உத்தரவுபடி உரிய வயது அடைந்தவர் என விளம்புகை செய்யப்பட்டுள்ளார். அதன்பிறகு மனுதாரர் 1-1/2 வருடங்கள் கழித்து இம்மனுவை தாக்கல் செய்து, மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு அனுமதி கேட்டு இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

13) விசாரணை நீதிமன்றத்தில் மனுதாரருடைய தனிப்பட்ட நிலையில் 18ம் பிரதிவாதி தரப்பினராக சேர்க்கப்படவில்லை. மாறாக இறந்துபோன 5ம் பிரதிவாதியுடைய வாரிசு என்ற நிலையிலேயே மனுதாரரர் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். 5ம் பிரதிவாதி விசாரணை நீதிமன்றத்தில் தனியாக எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையை தன்னுடைய எதிர்வழக்குரையாக ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே 5ம் பிரதிவாதி ஏற்றுக் கொண்ட 2ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் கூறியுள்ள சங்கதிகளை விட அதிகமாக, புதியதாக எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு சட்டப்படி அருகதை இல்லை. மனுதாரரின் தகப்பனாரான 5ம் பிரதிவாதி ஏற்றுக் கொண்ட 2ம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையின் அடிப்படையிலேயே மனுதாரர் விசாரணையை எதிர் கொள்ள வேண்டும். எனவே மனுதாரருக்கு எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கான சூழ்நிலை எழாத காரணத்தினால் இம்மனு அவசியமற்றதாகிறது. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

முடிவில், மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகைக்கு உத்தரவு இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2023-ஆம் வருடம் ஜுன் மாதம் 24-ஆம் தேதி அவையறிய பகரப்பட்டது.

R SHANMUGA SUNDARAM

Digitally signed by R SHANMUGA SUNDARAM
DN: cn=R SHANMUGA SUNDARAM, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**